**செய்தி வெளியீடு எண்:713** **நாள்: 26.10.2017**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு வரலாற்றில் எக்காலத்திலும் இதுவரையில்லாத அளவிற்கு தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற விருதுகளும் பரிசுப் பாராட்டுச் சான்றுகளும், நலத்திட்டங்களும் வழங்கிச் சிறப்பித்து வருகிறார்கள். மேலும் வரலாற்றுச் சாதனையாகத் தமிழ்ப்புத்தாண்டை சித்திரையில் மீட்டெடுத்து அரசு விழாவாக ஆண்டுதோறும் சித்திரையில் நடத்திட மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் விழாவும், விருதுகள் வழங்குதலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.07.2017 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுபவர்களிலும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவ கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் போராடுபவர்களிலும் சிறந்த ஒருவருக்கு சிங்காரவேலர் என்ற விருதும் இவ்விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் 1.00 இலட்சமும் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடையும் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள். அவ்வறிப்பிற்கிணங்க 2018ஆம் ஆண்டு சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதாக வழங்கப்படவுள்ளது. இவ்விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிப்பவர்கள் தன்விவரக் குறிப்புகளுடன் நிழற்படம் இரண்டு, எழுதிய நூல்கள் விவரத்துடன் அந்நூல்களில் ஒருபடி வீதம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 30.11.2017ஆம் நாளுக்குள் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும்.

முகவரி

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்,
தமிழ்ச் சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.
தொ.பே.எண். 044 28190412
044 28190413
மின்னஞ்சல் முகவரி: tamilvalarchithurai@gmail.com

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**